بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

January 03
2014

**தமிழாக்கம் : முஅல்லிம் M. நிஸாமுத்தீன் சாஹிப்**

## 2013 -ல் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம், பொருள் தியாகம் மற்றும் வக்ஃபே ஜதீத்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

முதன்முதலாக உங்களுக்கும், முழு உலகிலும் பரவியுள்ள அஹ்மதிகளுக்கும் இன்று புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு துறைகளிலிருந்தும், ஜமாஅத்துகளிடமிருந்தும், தனிநபர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வருகின்றன. அந்த அனைவருக்கும், ஜமாஅத்துக்கும் வாழ்த்துக்கள். அல்லாஹ் தனது அருளால் மட்டுமே முன்பை விட அதிகமாக இவ்வருடத்தையும் தனது அருள்களும் வளங்களும் கொண்ட வருடமாக ஆக்குவானாக! என்ற இந்த துஆவுடன் இந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

இந்த துஆதான் ஒவ்வொரு அஹ்மதியிடமும் இருக்கும்; இருக்கவும் வேண்டும். வெறும் சம்பிரதாய வாழ்த்துக்கள் கூறுவது பயனற்றது. அது உலகியல்வாதிகளின் வாழ்த்தாகும். ஆனால் அல்லாஹ்வுடைய பரக்கத்துகள், ரஹ்மத்துகளின் ஆசையும் துஆவும் இல்லாமல் வாழ்த்துக் கூறாதீர்கள். அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட தகுதிகளையும் திறமைகளையும் கூட அல்லாஹ்வின் அருள்களை நெருங்குவதற்காகப் பயன்படுத்தாத போது, அந்த ஆசையும் துஆவும் கூட நிறைவேறாது. எதனை அமல் செய்யுமாறு இறைவன் கட்டளையிட்டுள்ளானோ அதனை செய்யாமல், புது வருடப் பிறப்பின் இரவில் ஒன்றுகூடி நஃபில் தொழுவது மட்டும் போதுமானதன்று. நாம் அந்த நஃபில்களைத் தொழுவதுடன், நாம் இனி முடிந்தவரை நஃபில்களைத் தொடர்ந்து தொழுது வர முயற்சி செய்து வருவோம் என்ற உணர்வு உருவாக வேண்டும். நமது இபாதத்துகளின் தரத்தை இறை அருளைப் பெறுவதற்காகச் சிறப்புறச் செய்ய வேண்டும். நமது செயல் வாழ்வில் ஒவ்வொரு பணியையும் அல்லாஹ்வின் திருப்பதியைப் பெறுவதற்காகச் செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

இந்த சிந்தனையுடன் நாம் இருநாட்களுக்கு முன்பு புத்தாண்டைத் தொடங்கியிருந்தோம் எனில் – வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தோம் எனில் அல்லாஹ்வின் அருள்களை நெருங்கியிருக்க முயற்சி செய்தவர்களைச் சேர்ந்திருப்போம். அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவரின் சிந்தனையையும் இவ்வாறே ஆக்குவானாக! இதே சிந்தனைதான், இறைவனின் கடந்த கால அருளுக்கு நன்றி செலுத்துபவனாக மனிதனை ஆக்கி விடுகிறது. அல்லாஹ் முழுக்க முழுக்க தனது அருளால் மட்டுமே பேருபகாரங்களை நமக்கு வழங்கியுள்ளான். அவை, அதற்காக அல்லாஹ்வின் முன்பு குனிபவராகவும் ஆக்கியுள்ளது. நாம் இறைவன் முன் களங்கமற்ற முறையில் குனிவதுதான் வாழ்வின் நோக்கமாகும். அல்லாஹ் இதையே நமக்கு கூறியுள்ளான். இந்த உயிர்தான் நமது வாழ்த்துக்களின் பின்னால் இருக்க வேண்டும்.

நாம் கடந்த காலத்தை ஆய்வு செய்யும் போது, ஜமாஅத் அடிப்படையில் சில கஷ்டங்களும் நேர்ந்துள்ளன. இருந்தும், 2013 ஆம் ஆண்டு அல்லாஹ்வின் எண்ணற்ற அருள்கள் இறங்கிய ஆண்டாகத் தென்படுகிறது. நாம் அந்த அருள்களைத் தொடர வேண்டும். எளிமை, உழைப்பு, துஆவுடன் இநத அருள்களை ஈர்க்க முயற்சி செய்ய வேண்டும். குறிப்பாக எவர்களிடம் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்கள் குறிப்பாக இவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த அருள்களைப் பெறுவதற்கு பணிவு, உருக்கம், துஆ, உழைப்பு ஆகியவை தேவைப்படுகிறது.

சிலர் ஜமாஅத்தில், நமக்கு இத்தனை பதவிகளைப் பெறும் வாய்ப்பு கிடைத்துள்ளது என்று மகிழ்ச்சி அடைகின்றனர். நிச்சயமாக இந்தப் பணியைச் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது என்ற சொல்தான் அவர்களின் வாயிலிருந்து வருகிறது. ஆனால் அந்தப் பணியைச் செய்ததன் கடமை எப்போது நிறைவேறும் எனில், மனதில், சிறு மூளையில்கூட பதவி பெற்றதாக கற்பனை உருவாகாமல் இருக்க வேண்டும். மாறாக, மார்க்கத் தொண்டு என்ற கற்பனையே உருவாக வேண்டும். மார்க்கத் தொண்டை ஓர் இறை அருளாகக் கருதுங்கள் என்ற கருத்தே உள்ளத்தில்

இருக்க வேண்டும். தனது 'நான்' என்ற எண்ணம், பெருமை, அகம்பாவம், தம்மை பிறரை விட உயர்வாகக் கருதுதல் ஆகிய எண்ணங்கள் உள்ளத்தில் உருவாகக் கூடாது. இந்த எண்ணத்துடன் பணியாற்றினால் – பணிவுடன் பணியாற்றினால் அவர்களின் பணிகளில் அல்லாஹ் பரக்கத்தை வழங்குகிறான். அவர்களுக்கு அளவற்ற அருள்களை வழங்குகிறான். அவர்களுடன் பணி செய்பவர்களும் முழுமையான முறையில் ஒத்துழைப்பு நல்கி ஜமாஅத் பணிகளைச் சிறப்பாக நிறைவு செய்வர். ஜமாஅத்தின் தனி நபர்களும் உளமகிழ்ச்சியோடு அவர்களின் ஒவ்வொரு சொல்லையும் ஏற்றுக் கொள்வர். நமது எல்லா பொறுப்பாளர் –களையும் பணியாளர்களையும் தம்மைத்தாமே பணிவும், உருக்கமும், உழைப்பும், துஆவும் கொண்டவர்களாக இறைவன் ஆக்கி வைப்பானாக! துஆவின் வழக்கம் உள்ளவர்களாக முன்பை விட அதிகம் துஆ செய்பவர்களாக ஆக்குவானாக! இது நடக்கும் எனில் அவர்களால் காலத்தின் கலீஃபாவுக்கு சுல்தானே நஸீர் – வலிமைமிக்க உதவியாளர் ஆக முடியும். ஜமாஅத்தின் தனி நபர்களும் ஜமாஅத்துடன் நன்றியுணர்வோடு இருந்து ஜமாஅத்தின் காரியத்தை மற்ற காரியங்களை விட முன்னுரிமை வழங்குபவர்களாக இருப்பர். அதன் மூலம் நாம் இறைவனின் அருள்களின் காட்சியை எப்போதும் கண்டு கொண்டிருப்போம். நமது வேலை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பிரச்சாரத்தை மேம்படுத்துவது என்பது ஒவ்வொரு அஹ்மதிக்கும் தெரியும். மேலும் அன்னாரிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பாகிய இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகில் பரப்புவதும், பிரிந்து கிடக்கும் முஸ்லிம்களை ஒன்றுகூட்டுவதும் உலகை ஒரே இறைவனின் முன்பு குனிய வைப்பதும் ஆகும்.

அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறது. பிரச்சார நிலையம் நிறுவுதல், பள்ளிவாசல் கட்டுதல், தப்லீக் செய்தல், பிரசுரம் தயாரித்தல் மற்றும் அதனை பரப்புதல், முபல்லிக்குகள், முரப்பிகளை உருவாக்குதல், அவர்களை களத்திற்கு அனுப்புதல் இந்த அனைத்து பணிகளையும் ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் செய்து வருகிறது. நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த அனைத்து பணிகளையும் ஜமாஅத் செய்து வருகிறது.

நான் ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ்வின் திருவசனத்திற்கேற்ப நமது வாழ்வின் நோக்கம் இபாதத் செய்வதாகும். ஜமாஅத்துடன் தொழுவதற்காக பள்ளிவாசல்களை தேவையான இடத்தில் கட்டுவதும், ஏற்பாடுகள் செய்வதும் அவசியமாகும். அல்லாஹ் கடந்த ஆண்டு செய்த அருள்களுள் இது ஒரு பெரிய அருளாகும். உலகில் பள்ளிவாசல்களை உருவாக்குவதற்கான வாய்ப்பு நமக்கு கிடைத்தது. மஸ்ஜிதுகளை நிரப்பும் வாய்ப்பு கிடைத்தது. குறிப்பாக ஐரோப்பாவிலும், ஆஸ்திரேலியாவிலும், தூரக்கிழக்கின் மற்ற பகுதிகளிலும் பள்ளிவாசல்கள் கட்டுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இந்தியாவிலும், ஆப்பிரிக்காவிலும் குறிப்பாக வாய்ப்பு கிடைத்துள்ளது. அதன் சுருக்கமான விபரத்தை எடுத்து வைக்கிறேன்.

அல்லாஹ்வின் அருளால் 2013 ஆம் ஆண்டு இந்தியாவின் சிறு கிராமங்களில் 136 பள்ளிவாசல்கள் முறைப்படியாக உருவாக்கப் –பட்டுள்ளன. அதுவும் விரைவாக தற்காலிக ஸெட்டுகளாக உருவாக்கப் –பட்டுள்ளன. மரக்கட்டைகளைக் கொண்டு செய்யப்பட்டன. 258 புதிய பள்ளிவாசல்கள் கிடைத்தன. ஜமாஅத் செய்கின்ற தப்லீகினால் இமாம்கள் ஜமாஅத்தில் சேர்ந்தனர். அவர்களுடன் பள்ளிவாசல்களும் கிடைத்தன. இந்தியாவிலும் ஆப்பிரிக்காவிலும் பல பணிகள் நடந்துள்ளன என நான் கூறினேன். ஆப்பிரிக்காவில் 102 பள்ளிவாசல்கள் கிடைத்தன. 52 ஸெட்டுகள் இந்தியாவில் அவசரத் தேவைக்காக உருவாக்கப்பட்டுள்ளன. ஆப்பிரிக்காவில் இப்போது 41 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நான் கூறியது போன்று மற்ற நாடுகளிலும் பளளிவாசல்கள் உருவானது. இவ்வருடமும் உருவாகிக் கொண்டிருக்கின்றது. அதுபோன்று பிரச்சார நிலையங்கள் உள்ளன. 121 பிரச்சார நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவும் கிட்டத்தட்ட கணிசமான பரந்த நாடு ஆகும். ஆப்பிரிக்கா ஒரு கண்டமாகும். அங்கு கிழக்கிலும் மேற்கிலும் குறிப்பாக நமது ஜமாஅத் (6-7-8) ஆறேழெட்டு நாடுகளில் வலுவாக நிறுவப்பட்டுள்ளது. அவற்றில் மிகச் சிறப்பாக பணிகள் செய்யப்பட்டு வருகினறன.

பிறகு நான் கூறியது போன்று நமது பணி உலகில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை பரப்புவது ஆகும். இஸ்லாத்தின் உண்மையான அழகிய போதனையை பிரச்சாரம் செய்வது நமது குறிக்கோள் ஆகும். அதன் மூலம் உலகிற்கு இஸ்லாத்தின் அழகிய போதனை அறியக் கிடைக்க வேண்டும். நமது முபல்லிக்குகள் அல்லாஹ்வின் அருளால் இந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கின்றனர். அதுவன்றி பல்வேறு நாடுகளில் எனது சுற்றுப்பயணம் நடைபெறுகின்றது. அதன் மூலமும் ஓரளவுக்கு ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்படுகின்றது. இஸ்லாம் பற்றி அவர்களுக்கு தெரிய வருகிறது. பிறகு இந்த அறிமுகத்தை மேம்படுத்தி நமது முபல்லிக்குகள் தேசிய பத்திரிகைகளில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதுகிறார்கள். சிலர் எனது குத்பாவை சான்று காட்டி இஸ்லாத்தைப் பற்றி பத்திரிகைகளில் தொடர் கட்டுரைகள் எழுதுகின்றனர். இந்த தூதுச் செய்தியும் சென்ற வருடம் அதிகமாக பரந்த அளவில் நடந்துள்ளது.

சுற்றுப்பயணம் பற்றி நான் குறிப்பிட்டேன். சுற்றுப் பயணங் –களுக்குப் பிறகு அது குறித்து விளக்கியும் உள்ளேன். சென்ற வருடம் நான் அமெரிக்கா சுற்றுப்பயணம் செய்த போது ஒட்டுமொத்தமாக 12 மில்லியன் மக்களுக்கு நமது செய்தி சென்று சேர்ந்தது. கனடா சுற்றுப் பயணத்தின் போது இரு நகரங்களுக்கு சுற்றுப்பயணம் சென்றிருந்தேன். எட்டரை மில்லியன் மக்கள் வரை நமது தூதுச் செய்தி சென்று சேர்ந்தது. இந்த இரு நாடுகளிலும் சேர்த்து கிட்டத்தட்ட இரண்டு கோடி மக்களுக்கு நமது செய்தி சென்று சேர்ந்துள்ளது.

அல்லாஹ்வின் எண்ணற்ற அருளால் இந்த கோணத்தில் அதாவது தூதுச் செய்தியை சென்று சேர்ப்பதற்கு புதிய புதிய வழிகள் திறக்கின்றன. எனது சுற்றுப்பயணம் பற்றி அதில் தூதுச் செய்தியை எட்ட வைக்கும் வழி திறந்தது பற்றி கூறினேன். அதில் முபல்லிக்குகள் பத்திரிகைகளில் எழுதி அதனை மேம்படுத்தினர். அவர்கள் செயல் துடிப்புள்ள ஆர்வமுள்ள முபல்லிக்குகள் ஆவர். அவர்கள் அதனை மேலும் மேம்படுத்தினர். அதில் அல்லாஹ்வின் அருளால் மாபெரும் வெற்றியும் கிடைக்கின்றது. அதுபோன்று ஜெர்மனி சுற்றுப் பயணத்தை நான் மேற்கொண்ட போது, கடந்த ஆண்டு இரண்டு முறை அங்கு சுற்றுப்பயணம் சென்றேன். பள்ளிவாசல்களின் அடிக்கல் நாட்டினேன். மாநாட்டிலும் கலந்து கொண்டேன். அதனை ரேடியோவும், டி.வி. சேனல்களும், பத்திரிகைகளும் கவரேஜ் செய்தன. அவை ஜெர்மனியுடன் மட்டும் தொடர்புடையவை அல்ல. மாறாக, ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்துடன் தொடர்புடைய டி.வி. சேனல்களும் இருந்தன. இவ்வாறு ஒட்டுமொத்தமாக அந்த ஜெர்மனி பயணத்தின் மூலம் 4 மில்லியன் மக்கள் வரை செய்தி சேர்ந்தது. பிறகு சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளின் சுற்றுப் பயணத்தின் மூலம் பரந்த அளவில் மீடியாக்களின் கவரேஜ் கிடைத்தது. அதன் மூலம் 3 கோடி பேர் வரை நமது செய்தி சேர்ந்தது.

இவை அல்லாஹ்வின் அருளாகும். இவை மனித முயற்சியால் ஒருபோதும் முடியாது. மனித முயற்சியில் நிலை எவ்வாறுள்ளது? எனில் ஆஸ்திரேலியாவில் நமது வெளி விவகாரச் செயலருக்க ஒரு பத்திரிகையுடன் தொடர்பிருந்தது. அவர் அந்த பத்திரிகையாளரை என்னிடம் பேட்டி எடுப்பதற்காக அழைத்திருந்தார். அவரும் ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால் கடைசி நேரத்தில் வர முடியவில்லை என மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஆனால் இறைவன் என்ன செய்தான் எனில், அவர் மன்னிப்புக் கேட்ட 15 நிமிடங்களுக்குப் பின்னர் தேசியப் பத்திரிகை ஒன்றுடன் தொடர்பு கொண்ட போது, அப்பத்திரிகை நம்மை எதிர்பார்த்துக் காத்திருந்தது போன்று தென்பட்டது. எனது ஆஸ்திரேலியப் பயணம் குறித்தும், நான் இங்கு வந்திருப்பது குறித்தும் தெரிவிக்கப்பட்ட போது, தெரிவிக்கப்பட்ட 15 நிமிடங்களுக்குள் வந்து விட்டார். இது முழுவதும் இறையருளால் மட்டுமே நடந்தது. அல்லாஹ் தனது ஆதரவு மற்றும் உதவிகளின் காட்சியை நமக்கு காட்டுகிறான். அதுவன்றி இவ்வளவு குறுகிய காலத்தில் அப்பத்திரிகை பிரதிநிதி வருவார்; நம்மை பேட்டி எடுப்பார். அதுவும் தேசிய பத்திரிகை நிரூபர் வந்து பேட்டி எடுப்பார். பிறகு தேசிய அளவிலான பத்திரிகையில் அது வெளிவரும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

ஜெர்மனிய வரலாற்றில் கூட முதன்முதலாக ஜமாஅத் செய்தி ஒரு தேசிய டி.வி.யில் வெளியாகியது. ஆஸ்திரேலியாவின் ஒரு தேசிய சேனல் ஒன்றும் நமது செய்தியை ஒளிபரப்பியது. நான் முன்னரே கூறியிருந்தேன். அதன் மூலம் 46 நாடுகளில் நமது செய்தி சென்றது. நியூசிலாந்தின் தேசிய தொலைக்காட்சியும் செய்தி வெளியிட்டது. ஜப்பானில் ஒரு பத்திரிகையின் சர்குலேசன் 20 மில்லியன் அதாவது 2 கோடி ஆகும். அதுவும் என்னை பேட்டி எடுத்தது. அது மட்டுமின்றி அங்குள்ள பொறுப்பு பிரச்சாரகரையும் பேட்டி கண்டது. மீண்டும் செய்தி வெளியிட்டது. இஸ்லாம் பற்றிய கேள்விகள் தொடுத்தது. அங்கு நமது முதல் மஸ்ஜித் உருவாகிக் கொண்டிருக்கிறது. அது குறித்து செய்தி வெளியிட்டது. அல்லாஹ்வின் அருளால் ஒரு பரந்த இடம் கிடைத்துள்ளது. மிக நல்ல இடம். அதில் ஒரு ஹாலும் கட்டப்பட்டுள்ளது. ஹாலும் கூட கிப்லாவை நோக்கியவாறு உள்ளது. அதில் மாற்றி அமைக்கும் தேவையும் ஏற்படாமல் போனது. இதனால் ஜப்பானில் இந்த பள்ளிவாசல் கட்டியதால் ஜமாஅத்தின் அறிமுகமும் மேம்பாடு அடைந்தது.

நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த மஸ்ஜிது பற்றி எனது சுற்றுப் பயணத்தின் காரணத்தால் ஒரு தற்காலிக விளம்பரம் ஏற்பட்டது மட்டுமல்ல. அதன் பிறகும் கூட நமது பிரச்சாரகரை அவர்கள் வந்து பேட்டி எடுத்தனர். இதனால் முதலில் வெளியிட்ட செய்தி இன்னும் விரிவடைந்தது. எவ்வாறிருப்பினும், இறைவனின் அருள் எண்ணற்றது. ரேடியோ, டி.வி. மூலம் உலகில் எனது சுற்றுப் பயணத்தின் காரணத்தால் 18 கோடியே 26 இலட்சம் பேர் வரை நமது செய்தி போய் சேர்ந்தது. அதுபோன்று இவ்வருடம் 1088 பத்திரிகைகள் மூலம் 16 கோடி பேருக்கும் அதிகமாக நமது செய்தி போய் சேர்ந்தது.

இது அல்லாஹ்வின் அருளாகும். அவன் இவ்வளவு பரந்த அளவில் அஹ்மதிய்யத் ஆகிய உண்மை இஸ்லாத்தின் செய்தியை எட்ட வைக்க ஏற்பாடு செய்தான். இது அல்லாமல் ஆப்பிரிக்காவில் பணி நடைபெறுகிறது. அவையும் மிகப் பரந்த அளவில் நடைபெறுகிறது. மீடியாக்கள் மூலம் அங்கு கோடிக்கணக்கான பேருக்கு செய்தி சென்று கொண்டிருக்கிறது. கானாவின் அரசுத் தொலைக்காட்சி – கானாவின் Broadcosting Corporation ஆகும். அது நமது M.T.A செய்தியை ஒளிபரப்பத் தொடங்கியுள்ளது. 2013 ஆம் ஆண்டின் ஆண்டு மாநாட்டின் காட்சிகளை ஒளிபரப்பியது.

இந்த நிகழ்ச்சிகள் சேட்டிலைட் மூலமாக கானா அல்லாமல் அதன் அண்டை நாடுகளுக்கும் போகிறது. ஆகவே அல்லாஹ் அசாதாரணமான முறையில் உண்மையான இஸ்லாத்தை ஒன்றுசேர்க்கும் வழியை அங்கு திறந்து தந்துள்ளான். சென்ற ஆண்டில் பல்வேறு வரவேற்பு நிகழ்ச்சிகள் எனக்காக ஏற்பாடு செய்யப்பட்டன. அதில் கலந்து கொண்டவர்கள் நல்ல தாக்கத்திற்கு ஆளாகினர். படித்த மக்கள், அரசியல்வாதிகள், அரசுக் கொள்கைகளை உருவாக்குபவர்கள் ஆகியோருக்கும் இஸ்லாம் பற்றி அறியக் கிடைத்தது. அவர்கள் இதனை கற்பனையும் செய்ததில்லை. இஸ்லாத்தின் இந்த உண்மையான போதனைகள் அவர்களை மிகவும் வியப்பில் ஆழ்த்தின. ஆக, எத்தனை அருள்களைத்தான் மனிதனால் என்ன முடியும்?

சில நயவஞ்சக இயல்புடையவர்கள் இம்முறை இவ்வாறும் பேசினர். இது இன்னார் மூலம் உருவானது. இவ்வளவு செலவு செய்து உருவாக்கப்பட்டது என்று பேசினர். எவ்வாறிருப்பினும் ஜமாஅத்தின் ஒருசிலர் தான் அத்தகையவர். ஜமாஅத்தின் செய்தியைச் சேர்ப்பதற்கு எந்த மனிதனின் தேவையும் இல்லை. இது அல்லாஹ்வின் அருளாகும். காரணமில்லாமல் சிலவற்றை சிலர் பரப்பி விடுவது போன்று எந்த செலவும் செய்யப்படுவதும் இல்லை. எனவே ஜமாஅத் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நயவஞ்சகமுள்ளோர் பல்வேறு விதமாக கதைகட்டி விடுகின்றனர். இவ்வளவு பரந்த அளவில் ஒரு மனித முயற்சியில் ஒரு வேலை நடக்க முடியாது. முழுக்க முழுக்க இது அல்லாஹ்வின் அருளாகும். அல்லாஹ் விரும்பா விட்டால் நாம் எவ்வளவு தான் விரும்பினாலும் இது நடந்திருக்காது. இன்னும் சொல்வதாயின், பல்வேறு சுற்றுப் பயணங்களில் நான் பார்த்துள்ளேன். சில முக்கியஸ்தர்களை சந்திப்பதைப் பலர் விரும்புகின்றனர். அத்தகையோர் என்னைச் சந்திக்க விரும்பினர். ஆனால் நான் சில காரணங்களுக்காக மறுத்து விட்டேன். அதன் பிறகும் அவர்கள் பெரும் விருப்பத்துடன் மீண்டும் மீண்டும் சந்திக்க விருப்பம் தெரிவித்தனர். ஜமாஅத் சகோதரர்கள் இதற்கு சாட்சியாவார்கள். எனவே இவரை சந்திப்பதால் அல்லது இவரால் இஸ்லாத்தின் தூதுச் செய்தி மக்களைச் சென்றடைந்து விடும் என்று நினைப்பது மிகவும் தவறான கற்பனையாகும். இது அல்லாஹ்வின் அருளாகும். இதுவே அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது வாதமாகும்.

**அல்லாஹ் கூறினான்: நான் உனது பிரச்சாரத்தை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன்.**

எந்த மனிதனும் எட்ட வைக்கப் போவதில்லை. எனவே ஒவ்வொரு அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் எந்த உலகத் தலைவர்களிடம் எதுவும் பெறப் போவதில்லை. நமக்கு அது தேவையும் இல்லை. நாம் அல்லாஹ்வை மட்டுமே சார்ந்துள்ளோம். அவனே நமது எஜமானனும், உதவியாளனும் ஆவான். ஜமாஅத்தின் அசாதாரண வளர்ச்சி நமக்கு அதனை காட்டுகிறது. ஆப்பிரிக்காவில் நமது இந்த முன்னேற்றம் சில பெயர்தாங்கி ஆலிம்கள், தலைவர்களிடம் பெரும் நிம்மதியின்மையை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள், உலகம், அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் ஒன்றுதிரள்வதில் மகிழ்ச்சி அடையவில்லை. மாறாக அவர்களது கவலை மக்கள் அஹ்மதிய்யா ஜமாஅத் மூலம் உண்மை முஸ்லிம் ஆகிறார்களே என்பது தான்.

கடந்த சில நாட்களுக்கு முன் ஆப்பிரிக்காவில் ஒரு பெரும் முயற்சி நடந்தது. என்ன நடக்கிறது? இம்மக்கள் அஹ்மதிய்யா ஜமாஅத் மூலம் முஸ்லிம் ஆகின்றார்களே? நாம் கடுமை, தீவிரவாதம் மூலம் நாம் இஸ்லாத்தை பரப்ப முயல்கின்றோம். இம்மக்களோ குழப்பம் கிளர்ச்சிகளில் இருந்து விலகிச் செல்கின்றார்கள். பெயர் தாங்கி ஜிஹாதை விட்டு முஸ்லிம்களாக இருந்தும் விலகுகின்றனர். இந்த விசயமே இந்த உலகத் தலைவர்களுக்கும், உலமாக்களுக்கும் எரிச்சலூட்டுகிறது.

நமது டோக்கோ முபல்லிக் கூறுகிறார்: ஆயாகோ என்ற ஓர் ஊர் உள்ளது. அங்கு சென்ற போது அங்கு புதிதாக பைஅத் செய்தவர் கூறினார். முதலில் இங்கு ஒருநாள் முஸ்லிம்களின் ஒரு குழு வந்தது. எங்களுக்கு உண்ணவும் குடிக்கவும் சிறிது வழங்கினர். பிறகு கூறினர்: நீங்கள் இஸ்லாத்தை ஏற்குமாறு உங்களுக்கு அழைப்பு விடுகிறோம்! நாங்கள் கூறினோம். நீங்கள் எங்களுக்கு அழைப்பு விடுக்கிறீர்களா? ஆசை காட்டுகிறீர்களா? இந்தப் பொருள்களையும் தந்து விட்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கூறினால் நாங்கள் ஒருபோதும் அவ்வாறு செய்யமாட்டோம். ஏனெனில் எங்களிடம் அஹ்மதிய்யா ஜமாஅத்தினர் வந்தனர். அவர்கள் எங்களிடம் இஸ்லாத்தை தப்லீக் செய்தனர். நாங்கள் முன்னரே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டோம். அவர்கள் எங்களுக்கு இப்படியெல்லாம் ஆசை காட்டவில்லை. அவர்கள் எங்களுக்கு அழகிய போதனையைக் கற்றுத் தருகின்றனர். எங்கள் குழந்தைகளுக்கு தொழவும் கற்றுத் தருகின்றனர். குர்ஆன் ஓதவும் கற்றுத் தருகின்றனர்.

எனவே நாங்கள் உங்களிடம் இப்பொருள்களை வாங்க மாட்டோம். நீங்கள் எடுத்து வைக்கிற இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இல்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த இஸ்லாத்தையே ஏற்போம். அந்த தப்லீகை இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் தான் செய்கிறது. பிறகு அங்கு எண்ணிக்கை அல்லாஹ்வின் அருளால் அதிகரித்தது. புதிதாக பைஅத் செய்தவர்கள் மஸ்ஜிதை உருவாக்கியுள்ளனர்.

நைஜரைச் சேர்ந்த முபல்லிக் எழுதுகிறார்: பர்னிகோரனி என்ற ஊரின் சிறு கிராமம் புதூரோ. அங்கு தப்லீக் செய்யப்பட்ட போது அல்லாஹ்வின் அருளால் ஓர் ஊர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தது. உடனேயே அங்கு குழந்தைகளுக்கு எஸ்ஸர்னல் குர்ஆன் வகுப்பு தொடங்கியது. அங்கு இமாம்களுக்கான Refresher Course தொடங்கப்பட்டது. தர்பிய்யத் நிகழ்ச்சிகள் உருவாக்கப்பட்டன. இதுபற்றி செய்தி அங்கிருந்த வஹாபி இமாமுக்கு வந்ததும், அவர் உடனே மவ்லவிகளின் குழுவை அழைத்துக் கொண்டு சென்று அங்கு சொற்பொழிவாற்றத் தொடங்கினார். அஹ்மதிகள் காஃபிர்கள். அவர்களை மறுத்து விடுங்கள். நாங்கள் உங்களுக்கு பள்ளிவாசல் கட்டித் தருகிறோம். ஊரின் Cheif கூறினார்: நான் பிறப்பால் முஸ்லிம். இப்போது வாழ்வின் கடைசிப் பகுதியில் இருக்கிறேன். நான் ஒருபோதும் குழந்தைகள் குர்ஆன் ஓதியோ இஸ்லாத்தைப் பற்றி பேசியோ பார்த்ததில்லை. ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பரக்கத்தால் எனது சிறு பெண் குழந்தைகள் துஆவும், ஹதீஸும் கூறுகின்றன. நீங்கள் இப்போது கூச்சலிட்டதை மன்னித்து விடுகிறேன். ஆனால் இனியும் நீங்கள் இங்கு வந்தால் ஊரிலுள்ள இளைஞர்களை வைத்து உங்களை அடிக்க வைப்பேன் என்று கூறினார். மவ்லவிகள் இப்பேச்சைக் கேட்டு தைரியமிழந்து காரில் ஏறிச் சென்று விட்டனர்.

புர்கினோஃபாஸோவின் முபல்லிக் எழுதுகிறார்: பன்ஃபோரா மண்டலத்திலுள்ள ஒரு ஜமாஅத் மியாகாரா. அந்த ஊரில் 200 பேர் உள்ளனர். இவர்கள் இவ்வருடம் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தனர். அந்த ஊரின் இரு குடும்பங்கள் அன்சாரேதீன் என்ற பிரிவைச் சேர்ந்தவர். மிகவும் கூச்சலிட்டனர். தனித்தனியாக சந்தித்து ஜமாஅத் நபர்களைக் கட்டாயப்படுத்தினர். அஹ்மதிய்யா ஜமாஅத்தை விட்டு விடுங்கள். அன்சாரேதீன் பிரிவில் இணையுங்கள் என்றார். ஆனால் அஹ்மதிகள் அதற்கு செவிசாய்க்கவில்லை. அவர்களோ அழுத்தம் கொடுத்தனர். அஹ்மதிகள் கூறினார். அஹ்மதிகளின் தப்லீகும் தர்பிய்யத்தும் எங்களை எந்த அளவுக்கு மனநிறைவு செய்துள்ளது எனில் நாங்கள் ஒருபோதும் அஹ்மதிய்யத்தை விட்டு விட்டு இருளுக்கு திரும்ப விரும்பவில்லை. அவர்கள் பிறகு முறையாக மகிழ்ச்சியுடன் வரத் தொடங்கினர்.

அதுபோன்ற பெனினில் உள்ள ஒரு சின்ன ஊர் ஜிருமேதே அங்குள்ள ஒரு மனிதர் கரீம் என்று பெயர். பைஅத் செய்திருந்தார். 2-3 மாதத்திற்குப் பிறகு மவ்லவிகளின் தாக்கத்திற்குள்ளாகி எதிர்க்கத் தொடங்கினர். ஒருநாள் அங்குள்ள முஅல்லிம், ஜமாஅத் அமீரிடம் இம்மனிதர் ஜமாஅத்திற்கு எதிராக கடும் வார்த்தைகளைக் கூறுகிறார் என்று கூறினார். பரவாயில்லை. ஒருவர் முர்தத் ஆகி விட்டால் அல்லாஹ் ஒரு ஜமாஅத்தையே வழங்குவான் என்று இறை வாக்குறுதி உள்ளது என்று கூறினேன் என்று அமீர் சாஹிப் கூறுகிறார்.

மேலும் அமீர் சாஹிப் கூறுகிறார்: ஒருநாள் நானும் அந்த முஅல்லிம் சாஹிபும் அகோனோப்பே என்ற ஊரின் Chief அவரை மன்னர் என்று கூறுவர். அவரிடம் தப்லீக் செய்தோம். அல்லாஹ்வின் அருளால் அவர் அஹ்மதி ஆனார். பிறகு வாகா என்ற ஊரிலுள்ள சிலர் அங்கு இருந்தனர். அவர்கள் எங்கள் ஊருக்கும் வாருங்கள். வந்து தப்லீக் செய்யுங்கள் என்றனர். அவ்வூரில் மக்ரிப் தொழுதோம். தப்லீக் செய்தோம். 32 பேர் பைஅத் செய்தனர். இவ்வாறு அங்கு ஒரு புதிய ஜமாஅத் உருவாகியது. கெட்ட வார்த்தை பேசிய அம்மனிதர் ஒரு வழக்கில் காவல்துறையால் தேடப்பட்டவராக இருந்தார். எனவே அக்கிராமத்தை விட்டுச் சென்று விட்டார்.

நைஜீரியாவின் முபல்லிக் இன்சார்ஜ் எழுதுகிறார்: கேமரூன் பகுதியில் ஃபம்போன் முஸ்லிம் அதிகமாக வாழும் ஊர் ஆகும். அங்கு முதன் முதலாக கிலாஃபத் தினக்கூட்டம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு வருடத்தையும் போன்று இவ்வருடம் கேமரூனில் பாகிஸ்தானில் இருந்து வந்த தப்லீக் கூட்டம் அஹ்மதிகளை குறிவைக்க முயல்கின்றனர். கிலாஃபத் தினக்கூட்டம் பற்றி ரேடியோவிலும், தொலைக்காட்சியிலும் செய்தி வந்ததும் அவர்களுக்கும் செய்தி சென்று சேர்ந்தது. இதனால் தப்லீக் ஜமாஅத்தின் 24 பேர் கொண்ட ஒரு குழு அதில் 10 பேர் கீனியா வழியாகவும், 15 பேர் கேமரூனிலிருந்து சாட் எல்லை வழியாகவும் வந்தனர். அவ்வூரில் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தினர் அதிகமாக இருந்தனர். இங்குள்ள Chief இமாம், நாயிப் இமாம்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மற்றவர்களுடன் பைஅத் செய்து இருந்தனர். வந்த குழுவினர் நமது முஅல்லிம் மூலமாக தொடர்பு கொண்டனர். அந்த முஅல்லிம் மூலம்தான் மனைவியிடம் தப்லீக் குழு விசாரித்தது. முஅல்லிம் சாஹிபின் மனைவி, முஅல்லிம் சாஹிப் வெளியில் போயிருப்பதாகக் கூறினார். உடனே அம்மக்கள் அங்குள்ள சென்டர் மஸ்ஜிதிற்கு வந்தனர். அல்லாஹ்வின் அருளால் அது பெரிய பள்ளிவாசல் ஆகும். ஜமாஅத் அஹ்மதிய்யாவின் பள்ளிவாசலாகும். அங்கு அவர்கள் Chief இமாமிடம் கூறினார். நாங்கள் இங்கு தப்லீக் செய்ய விரும்புகிறோம். இங்கு நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கைகளைக் கூற விரும்புகிறோம்.

உடனே நமது Chief இமாம் கூறினார். நீங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராகப் பேச விரும்பினால் உங்களிடம் நான் கூறிக் கொள்கிறேன். நீங்கள் நிற்கின்ற இந்தப் பள்ளிவாசல் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிவாசலாகும். நாங்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதி முஸ்லிம்களே ஆவோம். எனவே ஒருபோதும் அவ்வாறு செய்வதற்கு உங்களுக்கு அனுமதியில்லை. நீங்கள் அனைவரும் இங்கிருந்து போகலாம். பிறகு

காவல்துறைக்கும் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் அவர்களை அந்த ஊரை விட்டு வெளியேற்றினர். அதுபோன்று தற்போது தென் ஆப்பிரிக்காவில் பாகிஸ்தான் மவ்லவிகள் ஒன்றுகூடினர். பாகிஸ்தானின் 20 மவ்லவிகள் கொண்ட குழு ஒன்று இந்தியாவின் டெல்லியிலிருந்து வந்திருந்தனர். சவூதி அரேபியாவிலிருந்தும் ஒரு குழு வந்துள்ளனர். Muslim Judicial Council –ன் ஏற்பாட்டின் கீழ் ஜமாஅத்திற்கு எதிராக Conference Programme செய்கிறார்கள்.

செராலியோனிலிருந்தும் இதே ரிப்போர்ட் தான் வந்துள்ளது. செராலியோனில் பாகிஸ்தானிய தப்லீக் முல்லாக்கள், எகிப்தின் அல் அஷ்ஹர் பல்கலைக்கழகத்தில் பயின்ற முல்லாக்கள், செராலியோனில் இருந்து சவூதி அரேபியா சென்று படித்து வந்த முல்லாக்கள் உட்பட சவூதி அரேபியாவின் செலவில் நூற்றுக்கணக்கானோர் இங்கு வந்துள்ளனர்.

கூறுகின்றார்கள்: ஒவ்வொரு ஃபிளைட்டிலும் கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கானவர்கள் இங்கு வருகின்றனர். ஊர்களிலும் கிராமங்களிலும் சென்று ஜமாஅத் அஹ்மதிய்யா மற்றும் ஷியாக்களுக்கு எதிராக மக்களை தூண்டுகின்றனர். தப்லீக் செய்வதற்குப் பதில் குழப்பம் செய்கின்றனர். பெரும் செலவு செய்து மாநாடுகள் நடத்துகின்றனர். ஆப்பிரிக்காவுக்காக குறிப்பாக செராலியோனிற்காக கணிசமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் வளர்ச்சி மற்றும் பள்ளிக்கூடம் உருவாக்குதல் என்ற பெயரில் செய்யப்படுகின்றன. இவ்வாறு அங்கிருந்து செய்திகள் வருகின்றனர். இதை செய்து தருகின்றோம். அதை செய்து தருகிறோம் என்கின்றனர். ஆனால் எப்போதும் போல் முன்னரும் இதுபோன்று பலமுறை நடந்து விட்டது. அங்கு செல்கின்றனர். பைசாக்களை அறிவிக்கின்றனர். ஆனால் உதவிகள் வருவதில்லை. அல்லது தங்களுக்குள்ளே தின்று விட்டு போய் விடுகின்றனர். அத்துடன் முடிந்தது கதை. இன்சா அல்லாஹ். இதுவும் அவ்வாறு தான் முடியும். எவ்வாறிருப்பினும் எந்தெந்த ஜமாஅத்துகள் முன்னேறுகின்றனவோ, எந்தெந்த அருள்கள் இறைவனிடமிருந்து இறங்குகின்றதோ அங்கெல்லாம் எதிர்ப்பும் வலுக்கின்றது. அதுவே நடக்கும். அதில் எல்லாம் நமக்கு கவலை இல்லை. கவலை தேவையும் இல்லை. இறுதியில் இவர்களின் விதியில் தோல்வியே எழுதப்பட்டுள்ளது. ஆனால் நாம் கவலைப்படத் தேவையுள்ள விசயமாவது வருங்காலத்திலும் இறைவனின் அருளுக்கு வாரிசாவதற்காக இந்த எதிர்ப்புகளை எதிர்கொள்வதற்காக நாம் நமது ஈமானை முன்னரை விட அதிகமாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். முன்னரை விட அதிகமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பிரச்சாரத்தை முழுமைப்படுத்த முயற்சி செய்யுங்கள். முன்னரை விட அதிகமாக துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். துஆவினால் இவ்வருடத்தை நிரப்புங்கள். தரூது இஸ்திக்ஃபார் மீது கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் நம்மீது ரஹ்மத்தின் பார்வையைச் செலுத்தி தனது அருளை நம்மீது விரித்துக் கொண்டே செல்லத்தக்க அளவில் கவனம் செலுத்துங்கள். எதிரிகளின் சூழ்ச்சிகளை அவர்கள் மீதே திருப்புவானாக! ஒவ்வொரு எதிரியையும் எதிர்ப்புகளையும் காற்றில் பறக்க விடுவானாக! அல்லாஹ்வின் அருள் முன்னரை விட அதிகமாக நம்மீது இறங்கட்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

துஆவில் அல்லாஹ் பெரும் ஆற்றலை வைத்துள்ளான். அல்லாஹ் மீண்டும் மீண்டும் என்னிடம் இல்ஹாமில் கூறினான். எது நடக்குமோ அது துஆவின் மூலமே நடைபெறும். நமது ஆயுதம் துஆவே ஆகும். அதுவன்றி வேறு எந்த ஆயுதமும் என்னிடம் இல்லை.

இந்த ஆயுதத்தையே நாமும் பயன்படுத்த வேண்டும். நாம் இதனை சரியான முறையில் பயன்படுத்துபவராக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! இன்று ஜனவரியின் முதல் ஜுமுஆவாகும். நடைமுறைப்படி வக்ஃபே ஜதீதின் புதிய ஆண்டின் அறிவிப்பு இந்த ஜுமுஆவில் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டின் கிடைத்த இறை அருள் பற்றியும் குறிப்பிடவும் படுகிறது. வக்ஃபே ஜதீதின் மூலம் செய்ததும், செய்து கொண்டிருப்பதும் கூறப்படுகிறது. அவற்றுள் சிலவற்றை நான் குறிப்பிட்டேன். ஆப்பிரிக்காவில் வக்ஃபே ஜதீத் சந்தாவில் பெரும் தொகை செலவிடப்படுகிறது. அதுவும் அல்லாஹ்வின் அருளாகும். இந்த சந்தா மூலம், தப்லீக் மைதானத்தில் முன்னேறவும், மஸ்ஜிதுகள் உருவாக்கவும் செலவு செய்யப்படுகிறது.

இது தொடர்பாக நான் மேலும் சிறிது கூறுவேன். நாம் அறிந்தது போன்று வக்ஃபே ஜதீத் திட்டம் முதலில் பாகிஸ்தானில் மட்டும் இருந்தது. நான்காவது கிலாஃபத்தில் பாகிஸ்தானுக்கு வெளியிலும் இத்திட்டம் கொண்டு செல்லப்பட்டது. அதன் மூலம் ஆப்பிரிக்கா மற்றும் இந்தியா ஜமாஅத்தின் பணிகளை விரிவுபடுத்தப்பட்டது. நான் கூறியது போன்று கடந்த ஒரு வருடமாக ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் மஸ்ஜிதுகளும், பிரச்சார நிலையங்களும் கட்டப்பட்டன. சில வாங்கப்பட்டன. அதுபோக தப்லீக் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டன. அதனால் இலட்சக்கணக்கான நற்பேறு பெற்ற ஆன்மாக்கள் அஹ்மதிய்யத் என்ற உண்மை இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளஇறைவன் வாய்ப்பளித்தான். நிச்சயமாக இந்த நாடுகளில் வாழும் அஹ்மதிகளும் தத்தமது வசதிவாய்ப்பிற்கேற்ப தியாகங்கள் செயகின்றனர். ஆனால் அவர்களின் ஏழ்மையினால் அவர்களின் செலவினங்கள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் அளவுக்கு தியாகம் செய்ய

முடிவதில்லை. எனவே செல்வந்த நாடுகளின் வக்ஃபே ஜதீதின் நிதி ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவிற்காக செலவு செய்யப்படுகின்றது. ஆனால் நான் கூறியது போன்று இந்த நாடுகளின் மக்களும் ஓர் உத்வேகத்துடன் சந்தா வழங்குகின்றனர்.

நமது கினி குணர்க்குரி முபல்லிக் எழுதுகிறார்: ஓர் அஹ்மதி இளைஞர் முஹம்மது சாகோ கூறுகிறார். எனது திருமண தேதி முடிவு செய்யப்பட்டது. திருமணச் செலவுகளை சமாளிக்க போதுமான தொகை வீட்டில் இல்லை. பணம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட இடங்களில் இருந்தும் கூட கிடைக்காது என்ற நிலை ஏற்பட்டது. அப்போது சந்தாவுக்கான அறிவிப்பு வந்தது. வீட்டில் இருந்த தொகையையும் எடுத்து சந்தாவாக கொடுத்து விட்டேன். அதனால் மக்கள் கூச்சலிட்டனர். என்ன காரியம் செய்தாய்? இந்த கொஞ்ச தொகையையும் சந்தாவாக கொடுத்து விட்டாய். அந்த இளைஞர் கூறுகிறார்: நான் இறைவனின் மீது ஈமான் கொண்டவன். இறைவன் மீது உறுதி கொண்ட மனிதனும் ஆவேன். எனவே பயப்பட வேண்டாம். இறைவனே எனக்கு உதவி செய்வான். இறை வழியில் தரப்பட்டது வீணாகாது. கூறுகிறார்: அடுத்த நாளே அவர் வேலைக்காக போன போது நீண்ட காலமாக வராத தொகையெல்லாம் கிடைத்து விட்டது. மாலை வீட்டிற்கு வந்து பணத்தைக் கொடுத்த போது மக்கள் வியந்து போயினர். எவ்வளவு விரைவாக இறைவன் அருள் செய்து விட்டான் என்றும் தியாகம் செய்வதற்கும் என்ன விதவிதமான வழிகளை இவர்கள் கையாளுகின்றனர் என்றும் மக்கள் வியந்தனர்.

பெனினிலிருந்து நமது முபல்லிக் எழுதுகிறார்: வருட ஆரம்பத்தில் எவ்வளவு மழை பெய்தது எனில் மக்களின் தானியங்கள் அனைத்தும் அழிந்தன. பஞ்சம் ஏற்பட்டது. எல்லாம் மூழ்கி விட்டது. சந்தா என்ன? உண்ணக்கூட எதுவும் மிஞ்சவில்லை. இந்நிலையை மாற்ற என்னிடமும் துஆவுக்காக எழுதினார். பிறகு அங்குள்ள ஒரு ஜமாஅத் ஒரு முடிவெடுத்தது. நமது தானியங்கள் அனைத்தும் அழிந்து விட்டன. நாம் கிராமப்புற ஜமாஅத்துகள் ஆவோம். நாம் இவ்வாறு செய்வோம். இம்முறை நாம் பயிரிடுவோம். அதில் ஒரு பகுதி வயலில் ஜமாஅத்திற்காக பயிரிடுவோம். அவை அனைத்தும் சந்தாவாக கொடுத்து விடுவோம். இவ்வாறு முடிவு செய்து விதைத்தனர். இறைவன் எவ்வளவு பரக்கத்தை வழங்கினான் எனில் முழுவதையும் வழங்கினர். 11 ஆயிரத்து 80 ஃபிராங்க் வருமானம் கிடைத்தது. அனைத்தையும் சந்தாவாக வழங்கினர்.

அதுபோன்று கேம்பியாவின் ஒரு பெண்மணி கூறுகிறார்: சந்தா வசூலிப்பவர் வசூலிக்க வீட்டிற்கு வந்தார். அவர் மீண்டும் மீண்டும் வீட்டிற்குள் ஒவ்வொரு பிள்ளைகள் சார்பாகவும் சிறு சிறு தொகையை வழங்கி வந்தார். முபல்லிக் இதை கூறுகிறார். பிள்ளைகள் உள்ளே சென்றனர். ஒவ்வொருவரும் சிறிது தொகையை தமது சேமிப்புப் பெட்டியிலிருந்து கொடுத்து விட்டு நாங்கள் மட்டும் ஏன் நற்கூலியில் இருந்து பின்தங்க வேண்டும் என்று கூறினார். இவ்வாறு பிள்ளைகளின் உள்ளத்தில் கூட அல்லாஹ் சந்தாவின் முக்கியத்துவத்தை போடுகின்றான். அதுபோன்று கேம்பியாவில் ஒரு புதிதாக பைஅத் செய்த பெண்மணி துணிமணிகளை துவைக்க சோப்பு வாங்கச் சென்றார். வழியில் அவருக்கு சந்தா வேண்டப்படுகிறது. ஒவ்வொருவரும் தம்மால் இயன்றதை தருமாறு கோரப்படுகிறது என்று தெரிய வந்தது. உடனே அவர் அவரிடமிருந்த தொகையை கொடுத்தார். சோப்புக்கு அல்லாஹ்வே ஏற்பாடு செய்வான் என்றார். அல்லாஹ்வும் ஏற்பாடு செய்தான். இருநாட்களுக்குப் பிறகு அவரது விருந்தாளி வந்தார். சோப்புகள் அடங்கிய முழு பெட்டியையே அவருக்கு அன்பளிப்பாக வழங்கி விட்டார்.

இவ்வாறு பெனின் உடைய ஒரு பெண் இருந்தார். மிகவும் மறைத்து நன்மைகளைச் செய்பவர். மார்க்கப் பணிகளில் ஆர்வமாக பங்கேற்பவர். அவர் கூறுகிறார்: அவரது சந்தாவும் கணிசமானதாக இருந்தது. இவ்வருட முடிவில் அவரை தொடர்பு கொண்ட போது, அவர் இறைவன் தனக்கு செய்த அருள்களை எண்ணிப்பார்த்து அதனை விட ஒரு இலட்சம் ஃபிராங்க அதிகமாக சந்தாவாக வழங்கினார். இம்முறை அவரிடம் அவரது இன்ன மகளிடமிருந்தும் சந்தா எதிர்பார்க்கப்படுவதாக கூறப்பட்டதும் மகளுக்காக 30 ஆயிரம் வழங்கினார். மகளுக்கு தெரிய வந்ததும் அவரும் தனக்காக வழங்கினார். இன்னொரு மகளின் சிறு சந்தா தொகை பாக்கி உள்ளது என்று கூறப்பட்டது. அதனையும் வழங்கினார். இத்தகைய மக்களும் உள்ளனர். தனது ஒவ்வொரு பொருளையும், எல்லா ஆசைகளையும் அகற்றி விட்டு சந்தாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்காக வழங்குகின்றனர்.

அதுபோன்று தன்சானியா முபல்லிக் சாஹிப் எழுதுகிறார்: ஒரு பகுதியிலுள்ளவர்களிடம் சந்தாவைப் பற்றி கூறப்பட்டதும் தனது சந்தாவை கொடுக்கத் தொடங்கினார். தேவைகள் அதிகம் இருந்தன. ஆனால் அனைத்தையும் அடக்கி விட்டு சந்தாவின் பக்கம் கவனம் செலுத்தினர்.

மாலி அமீர் சாஹிப் எழுதுகிறார்: நமது முஅல்லிம் அப்துல் காதிர் சந்தாவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். சந்தா தருவதில் பெரும் பரக்கத் இருப்பதாகக் கூறினார். அங்கு ஒரு இமாம் இருந்தார். மிகவும் ஏழை மனிதர். சைக்கிள் வாங்கக் கூட அவரிடம் வசதி இல்லை. அவர் கேட்டார். எவ்வளவு சந்தா வேண்டும். முஅல்லிம் சாஹிப்

கூறினார். எவ்வளவு அல்லாஹ் தவ்ஃபீக் வழங்கியுள்ளானோ அவ்வளவு தாருங்கள். ஆனால் எவ்வளவு தருவீர்களோ அதில் ஒருபோதும் குறைவு ஏற்படக் கூடாது. உடனே இமாம் சாஹிப் ஓராயிரம் ஃபிராங்க் வழங்கினார். தொடர்ந்து அந்த முஅல்லிம் கூறினார். சந்தா என்பது பரக்கத்திற்குரியது என்பது உண்மையாகும். அல்லாஹ் உங்களுக்கு சைக்கிளுக்கு பதில் மோட்டார் சைக்கிள் தருவான். இந்த வகையில் ஆறே மாதம் தான் ஆகியது. அவருக்கு மோட்டார் சைக்கிள் வாங்க அல்லாஹ் வாய்ப்பு வழங்கினான். ஓராயிரம் சந்தாவுக்குப் பதில் 65 ஆயிரம் ஃபிராங்க் வழங்கினார்.

இவ்வாறு ஹரியானாவில் ஓர் அஹ்மதியின் பட்ஜெட் 12000 ரூபாய் ஆக இருந்தது. சந்தாவின் முக்கியத்துவம் விளக்கப்பட்டது. அவர் கூறினார்: எனது மாத வருமானம் 50 ஆயிரம். அதற்கேற்ப பட்ஜெட் தயார் செய்யுங்கள். பிறகு அதற்கேற்ப வழங்கவும் தொடங்கினார். பிறகு இந்தியாவின் வக்ஃபே ஜதீது சந்தா அவருடையதுதான் அதிகமாகும். ஒவ்வொரு புதிய பட்ஜெட்டின் போதும் காலத்தின் கலீஃபா எவ்வளவு அதிகப்படுத்தியுள்ளார்கள் என்று கேட்டு அதற்கேற்ப தனது சந்தாவைக் கூட்டி எழுத வைப்பார். அவர் எவ்வளவு விரைவில் செலுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் செலுத்தி விடுவார். இவ்வருடம் அவரது கணவர் மர்ஹூமுடைய சார்பாகவும் 20 ஆயிரம் ரூபாய் சேர்த்து வழங்கினார்.

பிறகு இன்ஸ்பெக்டர் வக்ஃபே ஜதீத் எழுதுகிறார்: ஆஸ்னூர் ஜமாஅத்தில் ஒரு மனிதர் அவரிடம் சந்தா வாங்க எப்போது சென்றாலும் தனது வளர்ச்சி குறித்து ஒரு சம்பவம் கூறுவார். இம்முறை சென்ற போது அவர் கூறினார்: நான் பலருக்கு தொழில் கற்றுக் கொடுத்தேன். அவர்கள் இப்போது என்னோடு தொழில் போட்டி போடுகின்றனர். அந்தோ! வியாபாரத்தில் அவர்கள் என்னோடு போட்டி போடுகின்றனர். அல்லாஹ் அவரது வியாபாரத்திலும் பரக்கத் செய்வானாக! அந்தோ! சந்தா கொடுப்பதிலும் அவர்கள் என்னோடு போட்டி போடட்டுமே! என்னுடையபொருள் சந்தைக்குப் போய் சேர்ந்து விட்டால் அப்போது ரேட் குறைவாக இருந்தாலும் எனக்கு நல்ல விலையை ஏற்பாடு செய்து தந்து விடுகிறான்.

எண்ணற்ற சம்பவங்கள் ஆண்களுடையதும் பெண்களுடையதும் உள்ளன. அவை பொருள் தியாகம் தொடர்பானவை. சந்தாவின் முக்கியத்துவம் அவர்களுக்கு தெளிவாகி இருந்தது. மற்றவர்களுக்கு வெளிக்காட்டுவது மட்டுமல்ல. சுயமே செய்பவர்கள் – இம்மக்கள் முடிந்த வரை தமது கால்களில் நிற்க முயல்பவர்கள். இந்த சம்பவங்களிலிருந்து வெளிப்படுவதாவது, அஹ்மதிகள் திருக்குர்ஆன் கூறுகின்ற பொருள் தியாகம் செய்யுமாறு உள்ள கட்டளைகளின் கீழ் தியாகம் செய்பவர்களாவர். அதன் முக்கியத்துவத்தை இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

உலகில் மனிதன் பொருளின் மீது அதிக நேசம் வைத்துள்ளான். இதனாலேயே கனவிற்கான விளக்கத்தில் எழுதப்பட்டுள்ளது. ஒருவர் தனது நுரையீரல் வெளியில் எடுத்து ஒருவருக்கு தருவதாகக் கண்டால் அதன் அர்த்தம் செல்வமாகும். இதன் காரணத்தாலேயே உண்மையான இறையச்சத்தையும் ஈமானையும் பெறுவதற்காக, (3:93) لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ உங்களுக்குப் பிரியமான பொருளை செலவு செய்யாத வரை உண்மையான நன்மையைப் பெறமாட்டீர்கள் என்று இறைவன் கூறினான். இறை படைப்பினங்களின் மீது அனுதாபம் காட்டுதலின் பெரும் பங்கு பொருள் தியாகம் செய்வதாகும் என்பதிலிருந்து தெரிய வருவதாவது, மனித குடும்பத்தின் மீது அனுதாபம் காட்டுவது ஈமானின் இரண்டாம் பாகமாகும். இதனை செய்யாமல் ஈமான் முழுமை அடையாது. எதுவரை மனிதன் தன்னலத்தை விட பிறர் நலத்திற்கு முக்கியத்துவம் தருவதில்லையோ அதுவரை அவன் பிறருக்கு என்ன நன்மை செய்து விட முடியும்? பிறர் நலன் பேணுவதல், இஸார் என்ற தன்னை விட பிறருக்கு நலன் நாடுவது பிறருக்கு பயனுள்ளவராக இருப்பதற்கு மிக மிக அவசியமாகும். இந்த வசனத்தில் *(3:93)* لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ –ல் இதே தியாகத்தின் போதனையே வழங்கப்பட்டுள்ளது. எனவே பொருளை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வது மனிதனது தக்வாவின் உணர்விற்குரிய பண்பாகும். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வுக்காக வழங்குவதில் அவரது உயர் தகுதி எவ்வாறிருந்தது எனில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு தேவையை எடுத்துரைத்த போது வீட்டிலுள்ள அனைத்தையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டார். அல்லாஹ் இந்த தியாகம் செய்வோர் அதனை ரூஹைப் புரிந்தோர் அனைவரும் பொருள்களிலும் உயிர்களிலும் எண்ணற்ற பரக்கத்துகளை வழங்குவானாக!

இவ்வருடம் மற்றும் கடந்த வருடம் பற்றிய ஆய்வை எடுத்து வைக்கிறேன். கழிந்தது 56வது ஆண்டு 2014 ம் ஆண்டு முதல் 57வது ஆண்டு தொடங்குகிறது. அதனை அறிவிக்கிறேன். கடந்த 56வது வருடத்தில் அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீத் 54 இலட்சத்து 84 ஆயிரம் பவுண்டு பொருள் தியாகத்தை ஜமாஅத் எடுத்து வைத்துள்ளது. இது சென்ற வருடத்தை விட 4 இலட்சத்து 66 ஆயிரம் பவுண்ட அதிகமாகும். இவ்வருடம் பிரிட்டன் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இம்முறை பிரிட்டன் முதலிடம் என்பதன் பொருள் என்னவென்றால் முதலில் நான் பாகிஸ்தானைப் பற்றி கூறுவதில்லை. பாகிஸ்தானை விட்டு விட்டு தரத்தைக் கூறுவேன். இவ்வருடம் அல்லாஹ்வின் அருளால் பிரிட்டனில் நிலை பாகிஸ்தானை விட உயர்ந்ததாக உள்ளது. மேலும் பாகிஸ்தானை விட்டு விட்டு ஒப்பிட்டுப் பார்ப்பதில் இந்த கோணத்தில் பிரிட்டன் முதலிடம்.

பாகிஸ்தான் இரண்டாமிடம். பிறகு ஜெர்மனி, கனடா, இந்தியா, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள ஒரு ஜமாஅத், பிறகு பெல்ஜியம்.

அல்லாஹ்வின் அருளால் இவ்வருடம் பிரிட்டனின் வசூல் மிக அதிகமாகும். அல்லாஹ் சந்தா வழங்கியவர்களுக்கு எண்ணற்ற பரக்கத்துகளை வழங்குவானாக! அமெரிக்கா ஜெர்மனி மிகவும் பின்தங்கியுள்ளது. மேலே செல்ல வேண்டும் எனில் அவர்கள் மிகவும் முயற்சி செய்ய வேண்டும். இவர்களும் தமது நிலையை மேம்படுத்த முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் அவர்கள் மிக உயரமாக குதித்து விட்டார்கள். சிலர் எனக்கு ஆலோசனை தரலாம். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல்மஸீஹ் அவர்களின் காலத்தில் கூட ஒருமுறை வக்ஃபே ஜதீத் சந்தாவில் பாகிஸ்தான் இரண்டாம் இடத்திற்கு வந்தது. அவர்கள் நாட்டிற்கு வெளியில் உள்ளவர்களிடம் சந்தா அதிகமாக வழங்குமாறு கூறினார்கள். அவ்வாறு செய்தால் பாகிஸ்தான் தனது இடத்தில் நிற்கும். எனவே தாங்களும் அவ்வாறு செய்யுங்கள் என்று எனக்கு ஆலோசனை வழங்கலாம். நான் அவ்வாறு கூறமாட்டேன். எந்த தரத்தை அல்லாஹ் தந்தானோ அதில் இருங்கள். என்னென்ன முயற்சிகளைச் செய்ய வேண்டுமோ அதனை நீங்கள் செய்யுங்கள்.

ஆனால் பாகிஸ்தானில் இந்த இடம் எவ்வாறிருப்பின் முதலிடம் தான். அங்குள்ள கரன்ஸி அங்குள்ள நிலைமைகளின் காரணத்தால் devalue ஆகிவிட்டது. அவ்வாறிருந்தும் அவர்கள் தியாகம் செய்துள்ளனர். அதுபோக பொதுவாகவே பாகிஸ்தானின் சூழ்நிலையால் வியாபாரங்கள் நசிந்து விட்டன. பாகிஸ்தான் அஹ்மதிகள் குறிப்பாக குறி வைக்கப்– பட்டுள்ளனர். அது அவர்களின் வியாபாரங்களையும் பாதித்துள்ளது. இதையும் மீறி அவர்களின் குர்பானிகளின் தகுதி நிலைநாட்டப்பட்டுள்ளது. அவர்களது செல்வத்திலும் உயிரிலும் அல்லாஹ் பரக்கத்தை வழங்குவானாக! அங்குள்ள நிலைமைகளை அகற்றுவானாக! அவர்களுக்கு எளிமைகளை வழங்குவானாக! சிறிய எளிமைகள் ஏற்பட்டால் கூட இதே உணர்வுடன் அவர்கள் தொடர்ந்து சந்தா தரும்போது அவர்கள் வெளியிலிருந்து எந்த உதவியும் செய்யப்படாமலேயே அடுத்த வருடம் தானாகவே முன்னால் வந்து விடுவது தூரமான ஒன்றல்ல.

எவ்வாறிருப்பினும் பிரிட்டன் துள்ளிக் குதித்து முன்னேறியுள்ளது. அல்லாஹ் அதனை வாழ்த்துக்குரியதாக்கட்டும்! வக்ஃபே ஜதீத் செயலரும் அமீர் சாஹிபும் அதிக துஆவுடன் முயற்சி செய்ய வேண்டியது ஏற்படும். அதன் பிறகு பெரிய ஜமாஅத்துகளில் தனி நபர் அடிப்படையில் முதலாவது ஒரு மத்தியக் கிழக்கு நாடு – நபர் ஒன்றுக்கு 93 பவுண்டு, பிறகு அமெரிக்கா நபர் ஒன்றுக்கு 83 பவுண்டு, சுவிட்சர்லாந்து 61 பவுண்டு, பெல்ஜியம் 47 பவுண்டு, பிரிட்டன் 45 பவுண்டு. எண்ணிக்கை அடிப்படையில் சற்று அதிகமாகி இருப்பதாக தோன்றுகிறது. எனவே இவர்களின் சந்தா அதிகரித்துள்ளது. ஆஸ்திரேலியா 39 பவுண்டு, பிரான்ஸ் 38 பவுண்டு, கனடா 32 பவுண்டு, ஜப்பான் 30 பவுண்டு, சிங்கப்பூர், ஜெர்மனி, நார்வே முறையே 29 பவுண்டு ஆகும். கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்து 40 ஆயிரத்து 420. இதில் அதிகமான நபர் ஆப்பிரிக்காவில் புதிதாக பைஅத் செய்தவர்களும் குழந்தைகளும் அடங்கும்.

ஆனால் வருங்காலத்தில் ஆப்பிரிக்கர்கள் குறித்துக் கொள்ளுங்கள். யார் யார் சந்தா வழங்கினார்கள் என்று பட்டியல் அனுப்புங்கள். 10 பென்ஸ் தந்திருந்தாலும் சரியே. எந்தெந்த ஜமாஅத்தில் யார் யார் எவ்வளவு கொடுக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளலாம். பங்கெடுத்தோர் எண்ணிக்கை அதிகமானதில் புர்கினோஃபாஸோ, பெனின், செராலியோன், கேம்பியா, ஐவரிகோஸ்ட், தன்ஸானியா வருகின்றன. ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் நைஜீரியா முதலிடம். பிறகு கானா, மொரீஷியஸ். பாகிஸ்தானின் முதல் மூன்று இடங்கள். லாஹூர், ரப்வா, கராச்சி. பெரியவர்கள் சந்தாவில் முதலிடம் ஸியால்கோட், ராவல்பிண்டி, இஸ்லாமாபாத், சர்கோதா, குஜ்ரான்வாலா, குஜராத், முல்தான், நாரோவால், ஐதராபாத்.

*(இவ்வாறாக பாகிஸ்தான், பிரிட்டன், அமெரிக்கா, கனடா நாடுகளின் மாவட்டம் மற்றும் மண்டல வாரியான தர வரிசைகளை ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.)*

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் இந்தியாவின் மாநில வாரியாக முறையே 1) கேரளா 2) ஜம்மு காஷ்மீர் 3) ஆந்திரா 4) தமிழ்நாடு 5) மேற்கு வங்காளம் 6) ஒரிஸா 7) கர்நாடகம் 8) காதியான் – பஞ்சாப் 9) மகாராஷ்டிரா 10) டெல்லி, உத்திரபிரதேசம்.

வசூலின் அடிப்படையில் முதலிடம் பெற்ற ஜமாஅத்துகள்: கருளாயி, காலிகட், கண்ணணூர் டவுண், ஹைதராபாத், காதியான், கொல்கத்தா, சென்னை, பைங்காடி, மங்களூர், ரிஷிநகர், பர்தமாபுரின் பர்தோதம், கேரங். அல்லாஹ் இந்த தியாகம் செய்தவர்களுக்கு அளவற்ற அருள் புரிவானாக!

ஜுமுஆவிற்குப் பிறகு ஒரு ஜனாஸா தொழ வைப்பேன். யூசுஃப் லத்தீப் சாஹிப். அமெரிக்காவைச் சேர்ந்தவர். 23 டிசம்பர் 2013 அன்று 93வது வயதில் மரணமடைந்தார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர்

1920 ல் பிறந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் முஸ்லிஹ் மவ்வூது உடைய நூல்களைப் படித்த பிறகு 1948 -ல் பைஅத் செய்ய வாய்ப்பு கிடைத்தது. ஆப்பிரிக்க-அமெரிக்கன் அஹ்மதியாக இருந்தார். ஆரம்பகால ஆப்பிரிக்க-அமெரிக்கன்களைச் சேர்ந்தவர் என இவர் அடிக்கடி கூறுவார். நான் பைஅத் செய்வதற்கு கடமைப்பட்டுள்ளேன். செய்யாவிட்டால் இறைவனது உண்மையாளரை விட்டு திரும்பியவனாகி விடுவேன். அவர்கள் கல்வியில் டாக்டரேட் வாங்கியவர். பல்வேறு பல்கலைக் கழங்களில் புரொஃபொஸர் ஆக இருந்தார். பல்வேறு நூல்களும் எழுதியுள்ளார். அதில் தமது சுய சரிதமும் அடங்கும். இவரது பிரபல்யம் காரணமாக இவரது மரண செய்தி அமெரிக்காவில் முழு உலகிலும் பரவியது. அமெரிக்காவின் பெரிய பெரிய பத்திரிகைகள் அந்த செய்தியை வெளியிடவும் செய்தன. அமெரிக்க அதிபராக இருந்த கிளிண்டன் விருந்திற்கு அழைத்திருந்தார். அவர் பாகிஸ்தானியல்ல. பலர் பாகிஸ்தானியர் என்று கருதினர். ஆனால் அவர் ஆப்பிரிக்க-அமெரிக்கர். ஸல்வார் கமீஸ் அணிந்து சென்றிருந்தார். தன் துறையிலேயே மிகப்பெரிய விருது வாங்கி இருந்தார். அது நோபல் பரிசுக்கு இணையானது. அஹ்மதியாக இருந்ததால் மார்க்கத்தில் எப்போதும் காம்பிரமைஸ் செய்ததில்லை. அவர் இசை குறித்து பலவற்றை எழுதியுள்ளார். ஆனால் மது அருந்தப்படும் அவைகளில் ஒருபோதும் பங்கு பெற்றதில்லை. ஹஜ்ஜும் உம்ராவும் செய்ய வாய்ப்பு பெற்றிருந்தார். பொருள் தியாகம், சந்தா வழங்குவதில் அசாதாரணமாக பங்கெடுப்பார். ஒவ்வொரு மாதமும் சம்பளத்தின் காசோலை கிடைத்ததும் உடனே சந்தா வழங்கி விடுவது வழக்கம் என்று செகரட்டரி மால் கூறுகிறார். அவர் கூறி வந்தார். நான் பைஅத் செய்த நாளில் இருந்து இன்று வரை எனது உறுதியாவது அஹ்மதிய்யத்தின் வழியே உண்மையின் வழி. அதுவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த வழி. இந்த வழியில் செல்பவர் அழியமாட்டார் என்பது எனது உறுதியான எண்ணமாகும். அந்த வழியில் செல்வதன் மூலமே நானும் எனது குடும்பமும் ஈடேற்றம் பெறுவோம். எனது ஈமானானது அஹ்மதிய்யத். எல்லாரிடமும் சகோதரத்துவத்தை உருவாக்கும் போதனை தருகிறது. காதியானுக்கும் ரப்வாவுக்கும் செல்லும் வாய்ப்பும் கிடைத்தது. சென்ற வருடம் இலண்டனுக்கு வந்திருந்தார். கிலாஃபத் மீது அளவற்ற அன்பு அவருக்கு இருந்தது. மூன்றாவது கலீஃபாவையும் நான்காவது கலீஃபாவையும் சந்தித்துள்ளார். என்னையும் சந்தித்துள்ளார். ஜல்ஸாவுக்க வந்திருந்த போதும் நோயாளியாகவே இருந்தார். வீல் சேரில் இருந்தவாறே வந்திருந்தார். மிக நல்லவர். தொழுகைகளில் பேணுதல் உள்ளவர். ஒவ்வொரு ஜுமுஆ தொழுகையும் முறைப்படி பேணியவர். மிகவும் பரிவும், அனுதாபமும் காட்டுபவர். தூயவர். ஜமாஅத் அல்லாதவர்களிடம் கனிவுடன் நடப்பார். நீண்ட காலம் பல்வேறு துறைகளில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றவும் வாய்ப்பு கிடைத்திருந்தது. தஃவத்தே இலல்லாஹ்வில் நல்ல ஆர்வம் உள்ளவராக இருந்தார். ஜமாஅத் நூல்களை எப்போது தமது அண்டை அயலாருக்கும் நண்பர்களுக்கும் விநியோகம் செய்து வந்தார். எப்போதும் சட்டைப் பையில் பிரசுரம் வைத்திருப்பார். சக பயணிகளிடம் விநியோகிப்பார். தமது செலவில் கண் தெரியாதவர்களுக்காக இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம், குழந்தைகளுக்கான தர்பிய்யத் நூல் அச்சிட்டு வெளியிட்டார். மர்ஹூம் மூஸி ஆக இருந்தார். இவரது நினைவாக மனைவி ஆயிசா லத்தீப் சாஹிபா, மகன் யூசுஃப் லத்தீக் சாஹிப் இருக்கிறார்.

இவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் பொறுமையும் தைரியமும் வழங்குவானாக! அவரது நன்மைகளின்படி நடப்பதற்கு வாய்ப்பும் வழங்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **03.01.2014**

Translated by : Muallim M. NIZAMUDEEN Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456